# சர்வதேச சுற்றுலா தின விழா



பல்லுயிர் பெருக்கம் குறித்து மாணவ, மாணவிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கிறார் யுனிவர்சல் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் பூபேஷ் குப்தா.

**புதுச்சேரி, அக்.1:** சர்வதேச சுற்றுலா தினத்தை முன்னிட்டு, புதுச்சேரி முருங்கப்பாக்கத்தில் உள்ள கலை, கைவினை கிராமத்தை லாசுப்பேட்டை விவேகானந்தா மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் திங்கள்கிழமை பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியின் போது, யுனிவர்சல் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் பூபேஷ் குப்தா பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியத்துவம், குறிப்பாக பாம்பு கடித்தால், அதன் அறிகுறிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார். தொடர்ந்து, பசந்த் சர்மா, நீடித்த நிலையான வளர்ச்சி, சர்வதேச சூழல், தற்போதைய நிலைமை குறித்து பேசினார்.

கலை, கைவினை கிராம மேலாளர் பாஸ்கரன், புதுச்சேரி, அதைச் சுற்றியுள்ள சுற்றுலாத்தலங்கள், அவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். உயிரியல் புவியியல் வேளாண் கூட்டமைப்பு இயக்குநர் அருண் நாகலிங்கம், மகிழ்வைத் தரும் பயணங்கள் என்ற தலைப்பில் பேசினார்.

பாரம்பரிய கலைஞரான சண்முகம், மண்பாண்டக் கலை மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்தார். 20 விநாடிகளுக்குள் சிற்பங்களின் மாதிரிகளைத் தயாரிப்பதற்கான செயல்முறை விளக்கங்களை பாரம்பரிய கலைஞர் முனுசாமி அளித்தார்.

சுற்றுலா கிராமத்தில் இடம்பெற்றுள்ள கலைஞர்கள் அனைவரும் தங்கள் துறை சார்ந்த அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்தனர். நிறைவாக மாணவர்கள் அனைத்து கைவினைக் கடைகளையும் பார்வையிட்டனர்.